# மும்பை - சிவாஜி பூங்காவில், ராகுல் காந்தியின் - 'இந்திய ஒற்றுமை நியாயப் பயண' நிறைவு விழாவின் எழுச்சிமிகு காட்சிகள்!












### தேர்தல் பத்திரங்கள் மூலம்

# பா.ஜ.க. பெற்ற தொகை ரூ.8,250 கோடி!

## தேர்தல் ஆணைய இணையதளத்தில் தகவல்!

புதுடெல்லி, மார்ச் 19–

தேர்தல் பத்திரங்கள் தொடர்பான புதிய ஆவணங்களை தேர்தல் ஆணையம் நேற்று முன்தினம் தனது இணையதளத்தில் வெளியிட்டது.

இதன்படி, தேர்தல் பத்திரங்கள் மூலம் ரூ.8,250 கோடியை ஒன்றியத்தில் ஆளும் பா.ஜ. வசூலித்துள்ளது அம்பலமாகியுள்ளது.

தேர்தல் பத்திரங்கள் மூலம் அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை வழங்கும் திட்டத்தை ஒன்றிய பா.ஜ. அரசு கடந்த 2018ல் அறிமுகம் செய்தது. கருப்பு பணத்தை ஒழிக்க உதவும் என்று குறிப்பிட்டு அறிமுகப்படுத்தப்பட்ட இந்த திட்டத்தின் கீழ், ஒரு கட்சிக்கு யார், யார்? நிதி கொடுத்தார்கள் என்ற விவரம் ரகசியமாக வைக்கப்பட்டிருந்தது.

ஆளும் பா.ஜ. பெரிய தொழில் நிறுவனங்களை மிரட்டி தேர்தல் பத்திரங்கள் மூலம் நிதி வசூலிப்பதாக புகார்கள் எழுந்தன. இதனால் தேர்தல் பத்திரம் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்ற அரசியல் சாசன பெஞ்ச் கடந்த மாதம் 15ம் தேதி தீர்ப்பளித்தது.

அப்போது, தேர்தல் பத்திரம் திட்டத்தை ரத்து செய்ததோடு, இதுவரை தேர்தல் பத்திரங்கள் மூலம் அரசியல் கட்சிகள் பெற்ற நிதி குறித்த முழு விவரத்தையும் மார்ச் 6ம் தேதிக்குள் தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பிக்க எஸ்.பி.ஐ. வங்கிக்கு உத்தரவிட்டது.

ஆனால், பல தரவுகளை சேகரிக்க வேண்டி இருப்பதால் ஜூன் மாதம் வரை கால அவகாசம் கேட்டு உச்சநீதிமன்றத்தில் எஸ்.பி.ஐ. மீண்டும் முறையிட்டது. இதற்கு கடும் கண்டனம் தெரிவித்த உச்சநீதிமன்றம், கடந்த 12ம் தேதி தன்னிடம் உள்ள தரவுகளை தேர்தல் ஆணையத்திடம் எஸ்.பி.ஐ. வழங்கவேண்டும். 15ம் தேதிக்குள் அந்த விவரங்கள் தேர்தல் ஆணைய இணைய தளத்தில் வெளியிடப்பட வேண்டும் என்று நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

இதையடுத்து, எஸ்.பி.ஐ. வழங்கிய 763 பக்க ஆவண தரவுகளை தேர்தல் ஆணையம் கடந்த 13ம் தேதி இணைய தளத்தில் வெளியிட்டது. இதில், கம்பெனிகள் தேர்தல் பத்திரங்கள் வாங்கிய தேதி, தொகை பற்றிய விவரம் தனியாகவும், அரசியல் கட்சிகள் அதை வங்கியில் சமர்ப்பித்த தேதி, தொகை விவரம் தனியாகவும் இருந்தது. எந்த கட்சிக்கு எந்த கம்பெனி நிதி கொடுத்தது என்பதை கண்டுபிடிப்பதை தடுக்க தேர்தல் பத்திரத்தின் எண் எங்கேயும் குறிப்பிடப்படவில்லை.

கடந்த 2019 ஏப்ரல் 12ம் தேதி முதல் தீர்ப்பு வெளியான கடந்த பிப்ரவரி 15ம் தேதி வரையில் விற்ற தேர்தல் பத்திரங்கள் குறித்த தகவல்கள் அதில் இடம் பெற்றிருந்தன. அதன்படி, மொத்தம் ரூ.6,060 கோடி மதிப்பிலான தேர்தல் பத்திரங்களை பா.ஜ. பெற்றிருந்தது தெரியவந்தது.

இந்த வழக்கு கடந்த நவம்பர் மாதம் 2ம் தேதி விசாரணைக்கு வந்தபோது, கடந்த செப்டம்பர் 30ம்தேதி வரை தேர்தல் பத்திரங்கள் மூலம் அரசியல் கட்சிகள் பெற்ற நிதி விவரத்தை அவர்களிடம் இருந்து பெற்று தாக்கல் செய்ய தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டிருந்தது.

**வசூலான தொகையில் 50% பா.ஜ.க.வுக்கு வந்துள்ளது!**

அரசியல் கட்சிகள் தேர்தல் பத்திரங்கள் குறித்த அனுப்பிய தபால்களை சீல் உடைக்காமல் உச்சநீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம் தாக்கல் செய்தது. இந்த தபால்களை உச்சநீதிமன்ற பதிவுத் துறை தேர்தல் ஆணையத்திடம் ஒப்படைத்தது. அதில் இருந்த விவரங்களை தேர்தல் ஆணையம் நேற்று முன்தினம் தனது இணையதளத்தில் பதிவேற்றம் செய்தது.

நூற்றுக்கணக்கான பக்கங்களை கொண்ட இந்த ஆவணங்களில் ஒவ்வொரு கட்சியும் அளித்த விவரங்கள் இருந்தன. இதன்படி ஒன்றியத்தில் ஆளும் பா.ஜ.வுக்கு அதிகபட்சமாக ரூ. 6,986 கோடி வசூலித்திருந்தது. இதில், ரூ.2,190 கோடி திட்டம் துவங்கிய 2018 மார்ச் முதல் 2019 ஏப்ரல் 11ம் தேதி வரை வசூலாகியிருந்தது. அதே நேரத்தில் ஏற்கனவே உள்ள தரவுகளின்படி 2019 ஏப்ரல் 12ம் தேதி முதல் திட்டம் ரத்து செய்யப்பட்ட தேதி வரை பா.ஜ.வுக்கு ரூ.6,060 கோடி வசூலாகியிருந்தது.

இதன்படி, தேர்தல் பத்திரங்கள் மூலம் மொத்தம் ரூ.8,250 கோடியை பா.ஜ. மட்டும் வசூலித்தது அம்பலமாகி உள்ளது. தேர்தல் பத்திரங்கள் மூலம் வசூலான மொத்தம் ரூ.16,518 கோடியில் சுமார் 50 சதவீதம் பா.ஜ.வுக்கு வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.



திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் – அமைச்சர் இ.பெரியசாமி, அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் சிறப்புரையாற்றினர். கூட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், திண்டுக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார் ஆகியோர் உள்ளனர்.

### சட்டத்துறை அமைச்சரை போதைப் பொருள் கடத்தல்காரர்களுடன் தொடர்புபடுத்தி பேசிய

# அ.தி.மு.க. பிரமுகர் மீது நடவடிக்கை எடுத்திடுவீர்!

## காவல் நிலையத்தில் க.ராஜேந்திரன் புகார் மனு!

புதுக்கோட்டை, மார்ச் 19 -

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் தி.மு.க. அரசைக் கண்டித்து புதுக்கோட்டை தெற்கு மாவட்ட அ.தி.மு.க. சார்பில் அறந்தாங்கியில் மனிதச் சங்கிலி போராட்டம் அக்கட்சியின் மாவட்டச் செயலாளர் வைரமுத்து தலைமையில் அறந்தாங்கி நகரச் செயலாளர் ஆதி மோகனக்குமார் முன்னிலையில் நடைபெற்றது.

மனிதச் சங்கிலியில் கலந்து கொண்ட அறந்தாங்கி நகர்மன்ற முன்னாள் கவுன்சிலர் மண்டலமுத்து பேசும்போது, அறந்தாங்கி அருகே சமீபத்தில் பிடிபட்ட 110 கோடி ரூபாய் மதிப்புள்ள போதை பொருள் பறிமுதல் செய்யப்பட்ட சம்பவத்தில் தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சருக்கு தொடர்பு உள்ளது என்று பேசினார்.

மண்டலமுத்து பேசிய பேச்சு சமூக வலைத்தளங்களில் பரவியது. இதைப் பார்த்த தி.மு.க.வினர் அதிர்ச்சி அடைந்தனர்.

உடனே அறந்தாங்கி நகர தி.மு.க. செயலாளர் ராஜேந்திரன் தலைமையில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் விமலாதி ராஜன், அறந்தாங்கி நகர் மன்ற துணைத் தலைவர் தி.முத்து முன்னிலையில் நகர தி.மு.க., அறந்தாங்கி தொகுதி தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி, நகர சபை துணைத்தலைவர் மற்றும் கவுன்சிலர்கள் அமைச்சர் குறித்து அவதூறாக பேசிய அ.தி.மு.க. பிரமுகர் மண்டலமுத்து மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி அறந்தாங்கி போலீஸ் இன்ஸ்பெக்டர் கருணாகரனிடம் மனு கொடுத்தனர்.

நிகழ்வில் முன்னாள் நகர்மன்றத் தலைவர் மாரியப்பன், அறந்தாங்கி தொகுதி தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் செந்தில்வேலன், விவேக் ராஜா, ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள் வினோதன், கார்த்தி, வீரசிவம்,

மாவட்ட நெசவாளர் அணி தலைவர் பழனியப்பன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி ஒருங்கிணைப்பாளர் சக்திவேல், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் அன்பழகன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் அடைக்கலராஜா, மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் கருணாகரன், நகர துணைச் செயலாளர் ராமசாமி, நகர பொருளாளர் அனந்தராமன், மாவட்டப் பிரதிநிதி கார்த்திகேயன், முன்னாள் நகர் மன்ற உறுப்பினர்கள் ஆறுமுகம், கைலாசம், சமூக வலைதள தன்னார்வலர் பழனிகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட, மாநகர நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர், மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நாகர்கோவில் ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமைக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. மாவட்டக் கழகச் செயலாளர் நாடாளுமன்ற தேர்தல் பணியை விரைவுப்படுத்தும் விதமாக "இல்லம் தோறும் ஸ்டாலினின் குரல்" வழியாக அனைத்து வீடுகளுக்கும் சென்று திராவிட மாடல் அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி வாக்குகள் சேகரிக்க வேண்டும் என்று கழக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் எப்.எம்.இராஜரத்தினம், மாவட்டப் பொருளாளர் ஐ.கேட்சன், மாவட்டத் துணைச் செயலாளர்கள் பூதலிங்கம் பிள்ளை, கரோலின் ஆலிவர்தாஸ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் என்.தாமரை பாரதி, ரா.பார்த்தசாரதி, ஆர்.சதாசிவம், மாநகரச் செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் உட்பட மாவட்ட, மாநகர நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழகச் செயலாளர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.